DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.562/2018**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | மணிகண்டன் |
| Father Name | : | ராஜு |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.01.2026.

(1, 2, 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 3, 4, 6, 8, 9, 10 மற்றும் 12 முதல் 18 எதிரிகள் ஆஜர். 11வது எதிரி இறப்பு. 5வது எதிரி ஆஜர் இல்லை. 5வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது மதுரை கன்னனேந்தல், கோகுல் தெருவில் கதவு எண்.2/389 என்ற விலாசத்தில் குடியிருக்கிறேன். நான் டிரைவராக வேலை செய்கிறேன். சம்பவ சமயம் நான் 2005ம் வருடம் யோகோ அன் கோ என்ற கம்பெனியில் டிரைவராக வேலை பார்த்து வந்தேன். நான் வேலை பார்த்த மேற்படி கம்பெனியில் இருந்து அந்த கம்பெனியின் பார்ட்னர் ஆன சுரேஷ்பாபு என்பவரை அழைத்துக்கொண்டு வீட்டில் இறக்கிவிடச்சொன்னார்கள். நான் அவருடைய வீட்டின் அருகில் அவர் பயணம் செய்த காரை ஓட்டிக்கொண்டு செல்லும் போது, ஒரு வண்டி வந்து கார் மீது இடித்தது. அதில் எனக்கு மயக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆஜர் எதிரிகளை நான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை. எனக்கு வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. நான் பார்த்த போது சுரேஷ்பாபு இறந்துகிடந்தார். நான் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை. எனக்கு எழுத, படிக்க தெரியாது. போலீஸார் கேட்டுகொண்டதற்கிணங்க ஒரு எழுதாத வெள்ளை பேப்பரில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீஸார்

என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கடந்த 15.12.2015ம் தேதி மதுரை நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் வழக்கு பற்றி இரகசிய வாக்குமூலம் போலீஸார் சொல்லி கொடுத்ததன் பேரில் அதன் அடிப்படையில் நான் வாக்குமூலம் கொடுத்தேன். மேற்படி இரகசிய வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பங்கள் முறையே **அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 2005ம் ஆண்டு முதல் நான் யோகோ அன் கோ என்ற கான்ட்ராக்ட் கம்பெனியில் டிரைவராக வேலை பார்த்து வந்தேன் என்றும், அந்த கம்பெனியில் A.D மீனாட்சிசுந்தரம், சுரேஷ்பாபு என்ற பொட்டு சுரேஷ் மற்றும் A.D கண்ணன் ஆகியோர் பங்குதாரர்களாக இருந்தார்கள் என்றும், கம்பெனியில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு கம்பெனி சார்பில் இரண்டு வீடுகள் கட்டி தந்துள்ளார்கள் என்றும் அதில் ஒரு வீட்டில் நான் குடியிருந்து வந்தேன். அந்த நிலையில் சுரேஷ்பாபுவிற்கு நிரந்தரமாக டிரைவர் தேவைப்பட்டதால் எனக்கு மாதம் ரூ.8500/− சம்பளமாகவும், பேட்டா ரூ.1500/−ம் கொடுத்து மேற்படி சுரேஷ்பாபுவிற்கு டிரைவராக பணிபுரிந்து வந்தேன் என்றும் 2009ம் ஆண்டு எங்கள் கம்பெனி வாங்கிய TN 59 AQ 6789 என்ற Skoda Super Carஐ சுரேஷ்பாபுவிற்கு கொடுத்திருந்தார்கள் என்றும், நான் அந்த காரில் அவருக்கு டிரைவராக இருந்து வந்தேன் என்றும், தினசரி காலை 08.30 மணிக்கு டிவிஎஸ் நகர் துரைச்சாமி ரோட்டிலுள்ள சுரேஷ்பாபு வீட்டிற்கு வந்து அவரை

ஏற்றிக்கொண்டு அவர் சொல்லும் இடங்களுக்கு சென்றுவிட்டு இரவு வரை சுரேஷ்பாபு, என்னை வீட்டிற்கு செல்லலாம் என்று கூறிய பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிடுவேன் என்றும், கடந்த 31.01.2013ம் தேதி மாலை 04.30 மணிக்கு வந்தால் போதும் என்று காலையிலேயே சுரேஷ்பாபு என்னிடம் சொல்லியிருந்தார் என்றும் அதுபோல 31.01.2013ம் தேதி மாலை சுமார் 04.30 மணிக்கு நான் துரைச்சாமி நகரிலுள்ள சுரேஷ்பாபு வீட்டிற்கு வந்தேன் என்றும் உடனே என்னை காரை எடுக்கச்சொல்லி கம்பெனிக்கு போகச்சொன்னார் என்றும், நானும், அவர் காரில் ஏறிய பின்பு காரை எடுத்துக்கொண்டு பொறியாளர் நகரிலுள்ள கம்பெனிக்கு மாலை 05.00 மணிக்கு கொண்டு வந்து விட்டேன் என்றும், அங்கு சுரேஷ்பாபு அலுவல் பார்த்துவிட்டு இரவு 07.10 மணிக்கு வீட்டிற்கு போகலாம் என்று கூறினார் என்றும், நான் எப்போதும் செல்லும் வழியில் சத்தியசாய் நகர் முருகன் கோவில் ரோடு சந்திப்பில் இரவு சுமார் 07.50 மணிக்கு கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி போகும் போது, அந்த தெருவில் காலேஜ் படிக்க பசங்கபோல் இருந்த இரண்டு நபர்கள் சிவப்பு கலர் பல்சர் மோட்டார் சைக்கிளில் அந்த ரோட்டிலேயே அதே இடத்தில் சுற்றி சுற்றி வட்டம் அடித்தனர் என்றும், அதே சமயத்தில் ஓரமாக ஸ்டாண்ட் போட்டு நிறுத்தப்பட்டிருந்த கருப்பு கலர் பல்சர் மோட்டார் சைக்கிளின் அருகே கருப்பு சட்டை போட்டவன் நின்றுகொண்டிருந்தான் என்றும், மற்றொருவன் சிவப்பு கலர் சட்டை போட்டு பனிக்குல்லா அணிந்து கையில் உருட்டு கட்டையுடன் நின்றிருந்தார் என்றும், மேற்படி சிவப்பு கலர் இருசக்கர வண்டியின் மீது மோதிவிடாமல் இருக்க நான் காரை வலது பக்கமாக திருப்ப நினைத்த போது, எனக்கு பின்னால் வந்த TATA ACE TN 64 B 2053 குட்டி யானை வண்டி எனது காரின் இடது பக்கம் உரசியவாறு முன்னால் வந்து நின்றது என்றும், அந்த இடத்தில் ரோட்டோர மின்கம்பத்தில் டியூப் லைட் எரிந்துகொண்டிருந்தது என்றும், அந்த வெளிச்சத்தில் பார்த்த போது, சிவப்பு கலர் பல்சர் ஓட்டி வந்த பேண்ட் சட்டை அணிந்த இருவர் பல்சர் வண்டியை, எங்கள் முன் போட்டுவிட்டு

குட்டி யானை வண்டிக்கு ஓடிச்சென்று அருவாளையும், பெரிய கத்தியையும் எடுத்தார்கள் என்றும் அதே சமயம் குட்டி யானையில் வந்த வெள்ளை சட்டையும், கட்டம் போட்ட கைலியும் அணிந்திருந்த ஒருவரும், கைலி துண்டு போட்டிருந்த ஒருவனும், கைலி முண்டா பனியன் போட்டு துண்டு தலையில் கட்டிய ஒருவனும், வெறும் கைலி மட்டும் கட்டியிருந்த ஒருவனும் குட்டி யானையில் இருந்து ஆளுக்கொரு சாமான்களை எடுத்துக்கொண்டு எங்கள் வண்டியை நோக்கி ஓடி வந்தார்கள் என்றும், அவர்கள் ஓடி வரும் போது அதே சமயம் பேண்ட் சட்டை அணிந்திருந்த இருவர் அவர்கையில் வைத்திருந்த அருவாள் மற்றும் கத்தியால் அண்ணன் பொட்டு சுரேஷ் உட்கார்ந்திருந்த காரின் முன்புற கண்ணாடியை அடித்து உடைத்தார்கள் என்றும், சிவப்பு சட்டை, பனிக்குல்லா அணிந்திருந்தவன் கையில் வைத்திருந்த உருட்டு கட்டையால் என் பக்கம் முன்புற கண்ணாடியை அடித்து உடைத்தான் என்றும், அதே சமயத்தில் பொட்டு சுரேஷ் அண்ணன் காரை உடைப்பது யாருடா என்று கதவை திறந்து கொண்டு ஒரு காலை வெளியில் ஊன்றி தலையை நீட்டி கேட்ட போது, பேண்ட் சட்டை அணிந்திருந்த ஒருவன் கையில் வைத்திருந்த அருவாளால் பொட்டு சுரேஷ் அண்ணனின் தலையில் மாறி மாறி வெட்டினான் என்றும், அதே சமயம் பேண்ட் சட்டை போட்ட மற்றொருவன் கத்தியால் பொட்டு சுரேஷ் அண்ணனின் தாடையில் குத்தினான் என்றும், அதனால் சுரேஷ்பாபு அய்யோ அம்மா என்று அலறவே பேண்ட் சட்டை அணிந்த இருவரும் பொட்டு சுரேஷ் அண்ணனின் சட்டையை பிடித்து காரைவிட்டு வெளியே இழுத்து போட்டு அருவாள், பெரிய கத்தி, வாள் கத்தி ஆகியவைகளால் சுற்றி வளைத்து பின்பக்கமாக தலை, முன்தலை, முதுகு, மார்பு, வயிறு, கைகள், இடது கை, வலது கை, தொடை, இடுப்பு விலா என உடம்பு முழுவதும் மாறி மாறி வெட்டி யும் மற்றும் குத்தினார்கள் என்றும் அதே சமயத்தில் வெள்ளை சட்டை கட்டம் போட்ட கைலி அணிந்திருந்தவன் பொட்டு சுரேஷ் அண்ணனை கத்தியால் வெட்டிய போது, ஒரு வெட்டு தவறுதலாக அவனோடு வந்த பேண்ட் சட்டை

போட்டு அருவாள் வைத்திருந்தவனின் இடது கை மணிக்கட்டில்பட்டு இரத்தம் கொட்டியது என்றும், அதே சமயம் மற்றொரு வெட்டு பொட்டு சுரேஷ் அண்ணனின் தலையில் பட்டு கத்தி இரண்டாக உடைந்து விழுந்ததையும் பார்த்தேன் என்றும், அதே சமயம் பனிக்குல்லா அணிந்திருந்தவனின் குல்லா உருட்டு கட்டையால் காரை அடித்த போது, கீழே விழுந்ததை பார்த்தேன் என்றும் அந்த சமயத்தில் தப்பிக்க முயற்சி செய்த பொட்டு சுரேஷ் அண்ணனை பேண்ட் சட்டை போட்டு கத்தி வைத்திருந்தவன் டேய் தப்பிக்க போறாண்டா விடாதீங்கடா என்று சொன்னதையும் அதே சமயம் கையில் உருட்டு கட்டை வைத்திருந்தவன் பொட்டு சுரேஷை உயிரோட விடாதீங்க என்று சொன்னதையும் நேரில் பார்த்தேன் என்றும், அதே சமயம் பொட்டு சுரேஷ் அண்ணன் அலறிக்கொண்டே அதே இடத்தில் பயங்கர இரத்தத்துடன் குப்புற கீழே விழுந்தவுடன் பேண்ட் சட்டை அணிந்து கையில் கத்தியுடன் இருந்தவன் டேய் பொட்டு சுரேஷ் செத்துட்டாண்டா, வாங்கடா போகலாம் என்றதும், அனைவரும் குட்டி யானையிலும், இருசக்கர வாகனத்தில் வந்தவர்களும் வண்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டனர் என்றும், என்னால் அவர்களை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்றும், அந்த சம்பவத்தை பார்த்த நான் சில நிமிடங்கள் உறைந்து போய் நின்றுவிட்டேன் என்றும், பின்னர் எனது செல்போனில் சுரேஷ்பாபுவின் நண்பரான A.D மீனாட்சி சுந்தரம் என்பவருக்கு இந்த சம்பவத்தை சொன்னேன் என்றும், எனக்கு என்ன செய்வது என்று தெரியாமல் காரை நிறுத்திவிட்டு வழிபோக்கு ஆட்டோ பிடித்து போலீஸ் ஸ்டேசன் எங்கிருக்கிறது என்று கேட்டுக்கொண்டே சுப்பிரமணியபுரம் காவல்நிலையம் வந்து அங்கிருந்த சப் இன்ஸ்பெக்டரிடம் நடந்த சம்பவத்தை வாக்குமூலமாக சொன்னேன் என்றும், எனக்கு எழுத, படிக்க தெரியாததால் நான் சொன்னதை அவர்கள் வாக்கு மூலமாக பதிவு செய்து எனக்கு படித்து காட்டினார்கள் என்றும், நான் சொன்னபடி சரியாக இருந்ததால் அதில் கையொப்பம் போட்டேன் என்றும்,

சுப்பிரமணியபுர போலீஸார் அதை கொலை வழக்காக பதிவு செய்தார்கள் என்றும், பின்பு நான் பொட்டு சுரேஷ் அண்ணன் கொலையுண்ட இடத்திற்கு வந்தேன் என்றும் அந்த பதற்றத்தில் என் நண்பர்களிடம் எனது நோக்கியோ செல்போன் எண்.9843876649 அந்த இடத்திலேயே தவறி விழுந்துவிட்டது என்றும், அப்போது நேரம் 08.30 இருக்கும் என்றும், அதனால் என் செல்போனை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், எனது செல்போனில் கடைசியாக பொட்டு சுரேஷ் அண்ணன் கொலை செய்யப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் பேசியதாக ஞாபகம் வந்து காவல்நிலையம் வந்து சொன்னேன் என்றும், அப்போது காவல்நிலையத்தில் கொலை செய்யப்பட்ட இடத்தில் கைப்பற்றபட்ட 3 செல்போன்களை என்னிடம் காட்டினார்கள் என்றும், அதில் என்னுடைய நோக்கியோ போனை அடையாளம் காட்டி மற்ற இரண்டு செல்போன்கள் பொட்டு சுரேஷ் அண்ணனுடையது என்று 01.02.2013ம் தேதி காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினேன் என்றும், அதன் பின் பொட்டு சுரேஷ் அண்ணனை கொலை செய்தவர்கள் நத்தம் நீதிமன்றத்தில் 02.02.2013ம் தேதி அன்று சரண்டர் ஆகி இருப்பதாக நியூஸ் பேப்பர் மற்றும் டிவி பார்த்து தெரிந்துகொண்டேன் என்றும், இந்நிலையில் சுப்பிரமணிய புரம் காவல் ஆய்வாளர் என்னை அழைத்ததன் பேரில், 08.02.2013ம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு சுப்பிரமணியபுரம் காவல்நிலையம் சென்றேன் என்றும், காவல்நிலையத்தில் பொட்டு சுரேஷ் அண்ணனை கொலை செய்த கொலையாளிகள் இருந்தனர் என்றும், பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து சபா என்ற சபாரத்தினம் என்பவரை அடையாளம் காட்டி இவன் தான் பேண்ட் சட்டை அணிந்து பெரிய கத்தியோடு இருந்தவன் என்றும், சந்தானம் என்பவரை அடையாளம் காட்டி இவன் தான் பேண்ட் சட்டை அணிந்து பெரிய அருவாளுடன் இருந்தவன் என்றும், நான் ஓட்டி வந்த கார் முன்பு சிவப்பு கலர் பல்சர் மோட்டார் சைக்கிளில் வந்து வட்டம் அடித்தவர்கள் என்று அடையாளம் காட்டினேன் என்றும், மேலும் ஆஷா என்ற ராஜா என்பவரை அடையாளம்

காண்பித்து இவன் தான் வெள்ளை சட்டை கட்டம் போட்ட கைலி அணிந்து பெரிய கத்தி வைத்திருந்தவன் என்றும், செந்தில் என்பவரை அடையாளம் காட்டி இவன் தான் கைலி முண்டா பனியன் அணிந்து தலையில் துண்டு கட்டி பெரிய கத்தியுடன் இருந்தவன் என்றும், லிங்கம் என்பவனை அடையாளம் காட்டி கைலி துண்டு போட்டு பெரிய கத்தி வைத்திருந்தவன் என்றும், சேகர் என்பவரை அடையாளம் காட்டி இவன் தான் வெறும் கைலி மட்டும் அணிந்து சிறிய கத்தி வைத்திருந்தவன் என்றும், கார்த்திக் என்பவரை அடையாளம் காட்டி இவன் தான் TATA ACE TN 64 B 2053 என்ற குட்டியானை வண்டியை ஓட்டி வந்தவன் என்றும் காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினேன் என்றும், கொலையாளிகள் பயன்படுத்திய குட்டி யானை TATA ACE TN 64 B 2053 வண்டியையும், TN 58 W 5281 என்ற சிவப்பு கலர் பல்சர் வண்டியான மோட்டார் சைக்கிளையும் காவல்நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினேன் என்றும், மேலும் எனது காரின் முன்பக்க கண்ணாடியை உருட்டு கட்டையால் அடித்து உடைத்த சிவப்பு கலர் சட்டை அணிந்து பனிக்குல்லாவும் அணிந்திருந்தவரும் அவருடன் அங்கிருந்து தப்பிச்சென்ற அவர்கள் கருப்பு கலர் பல்சர் மோட்டார் சைக்கிள் காவல்நிலையத்தில் இல்லை என்றும், அந்த திடீர் தாக்குதலை நேரில் பார்த்த போது நான் நிலைகுலைந்ததால் அதனை தொடர்ந்து அளித்த புகார் வாக்குமூலத்தில் சம்பவம் பற்றிய முழுவிவரங்களை தெரிவிக்கவில்லை என்றும், தற்போது அனைத்தையும் வாக்குமூலமாக தெரிவிக்கிறேன் என்றும், வழக்கு தொடர்பாக நான் உங்களிடம் சொன்ன அனைத்து உண்மைகளையும் நீதிமன்றத்தில் இரகசிய வாக்குமூலம் கொடுக்க விரும்புகிறேன் என்றும், இவ்வழக்கானது CBCID க்கு மாற்றப்பட்டு வழக்கு விசாரணைக்காக CBCID காவல் ஆய்வாளர் ஆகிய தாங்கள எனக்கு சம்மன் கொடுத்து தங்கள் அலுவலகம் வரவழைத்து நேரில் விசாரணை செய்ததில் மேற்கண்ட விபரம் அனைத்தையும் சொன்னேன் என்றும் தற்போது எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

**1 முதல் 10 மற்றும் 12 முதல் 18 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டது போல் சம்பவத்தின் போது இறந்துபோன சுரேஷ்பாபு வை காரில் அமர வைத்து ஓட்டிச்சென்றேன் என்று குறிப்பிட்டுள்ளது உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.01.28 12:31:42 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.